செ.வெ.எண் : 510/2021 நாள்: 09.11.2021

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு பொதுப்பணிகள் (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருப்பத்தூர் மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு பொதுப்பணிகள் (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் கால்நடை பராமரிப்பு, ஆவின் பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தென்காசி.எஸ்.ஜவஹர்.இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.தேவராஜி, திரு.ஏ.நல்லதம்பி, திரு.அ.செ.வில்வநாதன், திருமதி.அமலு விஜயன், திரு.மு.பெ.கிரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு துறைகளின் கீழ் வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, ஒவ்வொரு துறையிலும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அமைச்சரை நியமனம் செய்து ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, திருப்பத்தூர் மாவட்டத்திற்கு என்னை நியமித்து, இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள 2 வருவாய் கோட்டங்கள், 4 வருவாய் வட்டங்கள், 3 பேரூராட்சிகள் மற்றும் 208 கிராம ஊராட்சிகள் ஆகியவை உள்ளன. ஒரு மாவட்ட வளர்ச்சி என்பது மாவட்டத்தின் கட்டமைப்பு. திருப்பத்தூர் மாவட்டம் கிராமங்கள் நிறைந்த மாவட்டம், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக கவனம் செலுத்தி மேம்படுத்த வேண்டும். இம்மாவட்டம் விவசாயம் நிறைந்த மாவட்டம் என்பதனால் நீர்நிலைகளில் அதிக கவனம் செலுத்தி இம்மமாவட்டத்திலுள்ள 603 ஏரி, குளங்களை தூர் வாரி நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு நீர்நிலைகளை பாதுகாத்து வைத்தால் நிலத்தடி நீர்மட்டம் பாதிப்படையாமல் இருக்கும். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில் இம்மாவட்டத்தல் கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்பகுதிக்கு பொதுமக்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். எனவே, சாலை மேம்பாடு என்பது இப்பகுதிகளில் மிக முக்கியமா கருத்தப்படுகிறது. எனவே, நெடுஞ்சாலைத்துறையினர் மிகுந்த கவனம் செலுத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

வருவாய் துறை சார்ந்த அலுவலர்கள் பயனாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு பட்டாக்கள் வழங்கும் பட்சத்தில் பட்டா வழங்கிய மறு தினமே அரசுப் பதிவேட்டில் பட்டாவினை பதிவேற்றம் செய்திட வேண்டும். இப்பணியினை கவனமுடன் தொடர்புடைய கோட்டாட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும். முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அளிக்கும் மனுக்களுக்கு முன்னுரிமை அளித்து அவற்றிற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். மேலும் மலை பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் அடிப்படை கோரிக்கைகளான சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்றிட துறை சார்ந்த அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இம்மாவட்ட தேர்தல் பரப்புரையின்போது அறிவித்த திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றிட தொடர்புடைய அலுவலர்கள் கருத்துருக்கள் மற்றும் திட்ட அறிக்கையினை தயார் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலமாக எனக்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் நான் தொடர்புடைய துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் துறை செயலாளர்களுக்கு பரிந்துரை செய்து உடனடியாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். திருப்பத்தூர் மாவட்டத்திற்கு தேவையான அரசுத்துறைகள் மற்றும் துறை அலுவலர்கள் விரைவில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஊரகப்பகுதிகளில் உள்ள 10 ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு தரம் உயர்ந்த அறிவித்துள்ளார்கள். மேலும், புதியதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஊராட்சி குழு தலைவர்கள், அனைத்து ஒன்றிய பெருந்தலைவர்கள், கிராம தலைவர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட ஊராட்சி சாலைகள், ஒன்றிய சாலைகள் ஆகியவற்றில் எந்த சாலைகளை மேம்படுத்த வேண்டும் என்பதை ஆய்வு செய்து அந்த சாலைகளை மேம்பாடு செய்திட ஒன்றிய ஆணையாளர் மூலமாக முன்மொழிவுகளை தயார் செய்து அதன் ஒரு நகலை எனக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக அனுப்பி வைக்கும் பட்சத்தில் சாலை பணிகள் நடைபெற விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வதில் திருப்பத்தூர் மாவட்டம் முதல் மாவட்டமாக வருவதற்கு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உறுதுணையாக இருந்து மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லம் தேடி மருத்துவ திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டத்தை அதிக கவனம் செலுத்தி சிறப்பாக செயல்படுத்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் வாழுகின்ற இலங்கை தமிழர்கள் பல்வேறு பகுதிகளில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் இலங்கை வீடு வழங்குவதற்கு தமிழர்களுக்கென வீடு வழங்க அறிவித்தார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த வாரம் வேலூர் மாவட்டத்தில் இலங்கை தமிழர்களுக்காக வீடு கட்டி வழங்கும் திட்டத்தை அடிக்கள் நாட்டி துவக்கி வைத்தார்கள். அதனடிப்படையில் இம்மாவட்டத்திலுள்ள சின்னபள்ளகுப்பம் பகுதியில் முதல் கட்டமாக 100 வீடுகளும், இரண்டாம் கட்டமாக

மின்னூர், சின்னப்பள்ளம் பகுதியில் 136 வீடுகளும் கட்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். திருப்பத்தூர் முதல் சேலம் வரை செல்லும் நான்கு வழிச்சாலை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் திருப்பத்தூர் புறவழிச்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை திருப்பத்தூர் தலைமையிடத்திலேயே இருக்க நடவடிக்க எடுக்கப்படும்.

அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் தங்கள் துறை சார்ந்த பணிகளில் பொதுமக்களுக்கு சேவை மனப்பான்மையுடனும் அர்ப்பணிப்பு உணர்வோடும் பணியாற்றி பொதுமக்களுக்கும் அரசுக்கும் பாலமாக செயல்பட்டு மாவட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாக திகழ வேண்டும் என பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.என்.ஆர்.கே.சூரியகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஇ.தங்கையாபாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, அனைத்து ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**